# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 11.07.2018

## தமிழக நிகழ்வுகள்

- சுற்றுச்சூழல் பாதுகாப்பு, ஆற்றல் மேலாண்மை ஆகியவற்றின் கீழ் அமைக்கப்பட்டுள்ள, **சென்னை மெட்ரோ ரயில்** தலைமை அலுவலக கட்டடத்துக்கு அமெரிக்க நிறுவனமான **யு.எஸ்.கிரீன் பில்டிங்** கவுன்சில் விருது அளித்து சிறப்பித்துள்ளது.



## இந்திய நிகழ்வுகள்

- மத்திய அரசு வெளியிட்டுள்ள நாட்டிலுள்ள கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசைப் பட்டியலில் பெங்களூரிலுள்ள இந்திய அறிவியல் இன்ஸ்டிடியூட் (ஐஐஎஸ்சி) முதலிடத்தைப் பெற்றுள்ளது.
    - ➢ சென்னை ஐஐடி உயர்கல்வி நிறுவனம் 2-வது இடத்தைப் பிடித்துள்ளது.




- மாநிலங்களவையின் கூட்டத் தொடரில் இதுவரை அனுமதிக்கப்படாமல் இருந்த சிந்தி, டோக்ரி, காஷ்மீரி, கொங்கனி மற்றும் சான்டலி ஆகிய 5 மொழிகளில் உறுப்பினர்கள் பேச அனுமதிக்கப்பட்டுள்ளது.

  - மாநிலங்களவையில் இனி 22 இந்திய மொழிகளில் விவாதிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

- **குறிப்பு:**

  - மாநிலங்களவையின் தலைவர் - வெங்கையா நாயுடு (குடியரசுத் துணைத் தலைவர்)

  - துணைத் தலைவர் → குலாம் நபி ஆசாத்




Languages Of India

- மிசோ நத்லாக் சர்வதேச பண்பாட்டு கலைவிழா (MIZO Hrahthak International Cultural Festival) என்ற பாரம்பரிய பண்பாட்டை

வெளிப்படுத்தும் கலைவிழா மிசோரம் மாநிலம் ஐஸால் நகரில் (Aizawal) நடைபெற்றுள்ளது.




**உலக நிகழ்வுகள்**

- பாகிஸ்தான் நாட்டின் பிரஸ்-1 மற்றும் பாக்டெஸ்-1ஏ ஏவுகணைகளை சுமந்து செல்லும் மார்ச் - 2சி இராக்கெட்டை சீன அரசானது வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.

  - பிரஸ் - 1 பாகிஸ்தானுக்காக சீனா வடிவமைத்த முதல் ஆப்டிகல் வகை தொலை உணர்வு செயற்கை கோள் ஆகும்.

  - பாக்டெஸ் - 1ஏ – பாகிஸ்தானிலேயே உருவாக்கப்பட்டுள்ளது.



- ஐக்கிய அரசு அமீரக நாட்டில் 18 வயது முதல் 30 வயதுள்ள இளைஞர்கள் ராணுவத்தில் கட்டாய பணிபுரிய வேண்டும் என்ற சட்டம் 2014 முதல் அமலில் உள்ளது. அதன்படி 12 மாதம்

We Shine Academy TM

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

இராணுவத்தில் சேவையாற்ற வேண்டும்.

- தற்போது UAE அரசானது 12 மாதத்திலிருந்து 16 மாதமாக உயர்த்தியுள்ளது.




- பார்கர் (Parkar) விண்கலம் - சூரியனை ஆய்வு செய்வதற்காக இந்த விண்கலத்தை ஆகஸ்ட் 4ம் தேதி நாசாவானது விண்ணில் செலுத்தவுள்ளது.
    - இந்த விண்கலத்திற்கு 2500 பாரன்ஹீட் வெப்பத்தை தாங்கும் கவசம் பொருத்தப்பட்டுள்ளது.




- நேட்டோ (NATO) நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் நேட்டோ கூட்டணிப் படை மாநாடு பெல்ஜியத்தின் தலைநகர் பிரஸல்சில் நடைபெற்றது.
    - இதில் ‘‘எல்லைகளற்ற தேசம்’’ என்ற புதிய கொள்கையை அந்த அமைப்பு முன்னெடுத்துள்ளது.

- குறிப்பு:
  - NATO – North Atlantic Treaty Organization
  - Head Quarters → Brussels, Belgium.




**விளையாட்டு நிகழ்வுகள்**

- சர்வதேச டி20 பேட்ஸ்மன்களுக்கான தரவரிசைப் பட்டியலை ஐசிசி (ICC) வெளியிட்டுள்ளது.
  - இதில் ஆஸ்திரேலியாவின் ஆரோன் பின்ச் முதலிடம் பிடித்துள்ளது.
  - இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம் முறையே பாகிஸ்தானின் பஹர் ஜமான் மற்றும் இந்தியாவின் கே.எல் ராகுல் ஆகியோர் பிடித்துள்ளனர்.

**முக்கிய தினங்கள்**

- ஜுலை – 11 → உலக மக்கள் தொகை தினம்
    - ➢ கருத்துரு: "குடும்பக்கட்டுப்பாடு ஒரு மனித உரிமை"

- **குறிப்பு:**
    - ➢ இந்தியாவில் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு 1872-ல் எடுக்கப்பட்டது. (10-ஆண்டுக்கு ஒருமுறை இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு எடுக்கப்படுகிறது)
    - ➢ 2011ம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பு இந்தியாவின் 15வது மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆகும்.

